உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், உங்களுடைய பதிலைச் சொல்லுங்கள்.

97—

கல்லூரி

***1267 திரு. கா. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை நான் இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், சென்ற ஆட்சியில் அமைச்சராக இருந்திருக்கிறார். அவர் அந்த நேரத்தில் தூங்கிவிட்டார் என்றே நினைக்கிறேன். அவருக்கு அங்கே வாய்ப்பு இருந்தபோது தன்னுடைய தொகுதி மக்களுக்காகச் செய்யாமல் இருந்துவிட்டு, இன்று அவர் அதைக் கேட்கிறார். இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கக்கூடிய உயர் கல்வியின் தரத்தினை உயர்த்தும்பொருட்டு பல்வேறு நல்ல திட்டங்களைச் செய்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.